4. அறிவிப்புகள்.

ஆ. கூடுதல் மானியக் கோரிக்கைகள்—1980–81 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1980–81 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் மொழிவது குறித்து, ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றிருக்கிறது :

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1980-81.

5. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, தங்களிடத்தில் நான் அண்ணா பத்திரிக்கை மீது உரிமைப் பிரச்னை அறிவிக்கை கொடுத்து நெடு நாட்களாகி விட்டது. போன தொடர் கூட்டத்திலேயே அதைக் கொடுத்தேன். அது என்ன வருமா, வராதா? (குறுக்கீடு) நான் இங்கேயும் கேட்கிறேன், அறையிலும் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அது பற்றி கவனித்துச் சொல்கிறேன்.

திருமதி டி. யசோதா: மதுராந்தகம் ஞானசுந்தரி மரணம் பற்றி முன்பே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகப் பேரவைத் தலைவர் கூறினார். ஏன் இன்றே எடுத்துக் கொள்ளவில்லை ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. பதில் வந்த பிறகுதான் எடுத்துக் கொள்ளமுடியும்.

திருமதி டி. யசோதா: அரசு பதில் இல்லையென்றாலும் அது ஒரு சமுதாயத்துப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். பேரவை விதிமுறைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் (கூச்சல், குழப்பம்).

1981 மார்ச் 26]

திரு. என். எஸ். வி. சித்தன்: நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லுங்களேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு என்று 'கமிட்' பண்ண முடியாது. பதில் வந்தவுடன் சொல்லுவேன். அப்பொழுது பேசலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு நிதி வேண்டும். (சிரிப்பு.)

திரு. துரைமுருகன்: அங்கே நீதி வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நீதியும் கிடைக்கும். நிதியும் வேண்டும்.

6. இறுதித் துணை நிதி அறிக்கை 1980–81

(விவாதம்—வாக்கெடுப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1980–81 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின் மீது பொது விவாதமும் மேற்படி ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: '1980–81 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23–3–1981-ஆம் நாளிட்ட அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரிலே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் அந்தந்த இனங்களுக்கு 1980–81-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றாலும், அவற்றை முன்மொழிய வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், 1981–82 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை விவாதத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகவும் இதிலே இருக்கிற தலைப்புகள் பெரும்பாலும் அதிலேயும் இருக்கிற காரணத்தாலும், இதிலே விரிவாக எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு இந்த அவையிலே பொது விவாதத்திலே பதில் சொல்லுகின்ற வாய்ப்பு இருப்பதன் காரணமாகவும் இப்போது அதுபற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.